பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, "1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு மூன்றும் திருத்த) மற்றும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 21 (3) விதியின் கீழ் "இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள '2. அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பின் கீழுள்ள இனம் 4-ஐ, இனம் 6-க்குப் பிறகு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(2) அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) **தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.